

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு – தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் நடைபெற்ற பேச்சுப்போட்டியை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி பெ. கீதாஜீவன் துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜீ.வி.மார்க்கண்டேயன், எம்.சி.சண்முகையா,மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ரகு, தூத்துக்குடி மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.எம்.மதியழகன் வரவேற்புரை ஆற்றினார். தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் நன்றியுரை நிகழ்த்தினார். மேலும் இந்நிகழ்வில் தூத்துக்குடி மாநகர தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் அருண் சுந்தர் மற்றும் வடக்கு – தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் 26.08.2024 அன்று பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை அமைச்சர் சக்கரபாணி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் அய்யம்மாள், ஒட்டன்சத்திரம் நகர்மன்ற துணைத்தலைவர் வெள்ளைச்சாமி, வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன் உட்பட பலர் உள்ளனர்.

### சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# அன்பில் பொய்யாமொழியின் 25 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### மாவட்டச் செயலாளர் - – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாலை அணிவிப்பு ! மு.மதிவாணன் அறிக்கை!

திருச்சி, ஆக. 28 -

திருச்சி மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரும், தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவருமான, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான, அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், அவரது திருவுருவப் படத்திற்கு இன்று (28/08/2024 ) காலை 9:00 மணி அளவில் மாவட்ட செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகின்றது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஊராட்சி ஒன்றியம் வெங்கட்டன் குறிச்சி கிராமத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 8 லட்சம் மதிப்பில் புதிய நாடக மேடையை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் திறந்து வைத்தார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரியதர்ஷினி, ஊராட்சி மன்ற தலைவர் பத்மாவதி ரவிச்சந்திரன் உட்பட ஏராளமான கிராமத்தினர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எஸ்.ஆர்.இராஜகண்ணப்பன் சிறப்புரை!

# இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், ஆக. 28 -

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்டிக வருமாறு:

கழக தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி இராமநாதபுரம் மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று ( 28.08.2024 - புதன்கிழமை) மாலை 03.30 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் முன்னாள் அமைச்சர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் அமைச்சர் எஸ்.ஆர்.இராஜகண்ணப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் ளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள். பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

**பொருள் :**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக நாணயம் வெளியீட்டிற்கு பாராட்டு தெரிவித்தல்.

செப்டம்பர் 11 தியாகி இமானுவேல் சேகரனார் நினைவேந்தலை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராமநாதபுரம் வருகை.

ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துதல்.

இரண்டாம் கட்ட புதிய கழக உறுப்பினர் அட்டை வழங்குதல்.

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் OMR படிவம்.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.,

## சென்னையில் விமான வருகை எண்ணிக்கை அதிகரிப்பு!

சென்னை, ஆக. 28 –

சென்னை விமான நிலையத்தின் 2 ஓடுபாதைகளும் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்படுவதால், இரண்டாவது ஓடுபாதையில் இயக்கப்படும் விமானங்களின் எண்ணிக்கை 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

சென்னை விமான நிலையத்தில் இரண்டு ஓடுபாதைகள் (ரன்வே) செயல்பாட்டில் உள்ளன. முதல் ரன்வே 3.66 கிலோ மீட்டர் நீளமும், இரண்டாவது ரன்வே 2.89 கிலோமீட்டர் நீளமும் கொண்டது. முதல் ரன்வே பிரதான ரன்வே ஆகும். இதில், பெரிய ரக விமானங்கள் வந்து தரையிறங்கி, புறப்படுகின்றன. இரண்டாவது ரன்வேயில் ஏடிஆர் எனப்படும் 76 இருக்கைகள் கொண்ட சிறிய ரக விமானங்கள் மற்றும் தனியாரின் தனி விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இந்த இரண்டு ரன்வேக்களையும் ஒரே நேரத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகளை, இந்திய விமான நிலைய ஆணையம் மேற்கொண்டது. அதற்கு வசதியாக சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானங்கள், ஒரு ரன்வேயில் இருந்து மற்றொரு ரன்வேக்கு செல்ல, டாக்ஸி வே என்ற இணைப்புப் பாதைகள் பயன்படுத்தப்படுகிறது. இந்த டாக்ஸி வே 'பி' என்ற பிராவோ முதல் ரன்வேக்கு, நேராக செல்லாமல் வளைந்து செல்லும் வகையில் இருந்தது.

இதனால் தரையிறங்கும் மற்றும் புறப்படும் விமானங்கள் டாக்ஸி வேயில் வேகமாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதனால், இந்த டாக்ஸிவே பியை, நேர்படுத்தும் பணிகள் நடைபெற்றன. அந்த பணிகள் நிறைவடைந்து, தற்போது சென்னை விமான நிலையத்தில் ஒரே நேரத்தில், இரண்டு ரன்வேக்களும் பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளன. இதன் மூலம், இரண்டாவது ரன்வேயில் விமான சேவைகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்க தொடங்கியுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதத்தில் விமான நிலையத்தின் இரண்டாவது ரன்வேயில் 615 விமானங்கள் இயக்கப்பட்டன. அதுவே கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் இரண்டாவது ரன்வேயில் இயக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை 10 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. சென்னை விமான நிலையத்தில் ஏற்கெனவே ஒரு மணி நேரத்தில் 30 விமானங்கள் இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஒரு மணி நேரத்துக்கு சுமார் 50க்கும் மேற்பட்ட விமானங்கள் இயக்கப்படுகின்றன. விமானங்களின் இயக்க எண்ணிக்கை அதிகரிப்பதோடு, விமானங்கள் புறப்பாடு, தரை இறங்குவதில் ஏற்படும் தாமதங்கள் தவிர்க்கப்படுகின்றன.



நெல்லை கிழக்கு மாவட்டம் கோபாலசமுத்திரம் பேரூர் கழகம் சார்பில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வழிகாட்டுதலின்படி வடக்கூர் அம்மன் கோவில் திடலில் அவைத்தலைவர் ராமையா தலைமையில் தொ.மு.ச. தலைவர் முருகேசன் சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.பேரூர் கழகச் செயலாளர் தி.வானுமாமலை வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர், பேரூராட்சி தலைவர் ப.தமயந்தி, கழகப் பேச்சாளர் தமிழ் பிரியன் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்வில் குமார், கணேஷ் மாரியப்பன், சுந்தரராஜன், வெங்கடேசன், ஜெயமாலதி, மாடசாமி, சுதர்சன், டாக்டர் ஜெயந்தி, லட்சுமி உள்பட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய, நகர வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!



### மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2024 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றியம் மற்றும் நகரங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

| தேதி /நாள் | நேரம் | ஒன்றியம் / நகரம் | இடம் |
|---|---|---|---|
| 29.08.2024 வியாழக்கிழமை | காலை 9.00 | இடங்கணசாலை நகரம் | சீனிவாசா திருமண மண்டபம், காடையாம்பட்டி, இடங்கணசாலை. |
| | காலை 11.00 | மகுடஞ்சாவடி ஒன்றியம் | ஆர்.கே.திருமண மண்டபம், மகுடஞ்சாவடி |
| | மாலை 4.00 | சங்ககிரி ஒன்றியம் | பி.ஆர்.எம். திருமண மண்டபம் சேலம் மெயின் ரோடு, சங்ககிரி |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 | எடப்பாடி ஒன்றியம் | ஸ்ரீ வரதராஜபெருமாள் திருமண மண்டபம், வெள்ளக்கவுண்டனூர். |
| | காலை 11.00 | கொங்கணாபுரம் ஒன்றியம் | ஸ்ரீ என்.பி.டி. மஹால், கொங்கணாபுரம் |
| 31.08.2024 சனிக்கிழமை | மாலை 4.00 | நங்கவள்ளி ஒன்றியம் | எம்.என்.வி.மஹால், வனவாசி |
| 02.09.2024 திங்கட்கிழமை | காலை 9.00 | மேச்சேரி ஒன்றியம் | விஜயமஹால், மல்லிகுந்தம் ரோடு, மேச்சேரி |
| | காலை 11.00 | மேட்டூர் நகரம் | கற்பகம் திருமண மண்டபம், மேட்டூர் |
| | மாலை 4.00 | கொளத்தூர் ஒன்றியம் | எஸ்.எஸ்.மஹால், கொளத்தூர். |
| 03.09.2024 செவ்வாய்கிழமை | காலை 9.00 | தாரமங்கலம் ஒன்றியம் | ஜே.பி. திருமண மண்டபம், துட்டம்பட்டி |
| | காலை 11.00 | தாரமங்கலம் நகரம் | செங்குந்தர் மண்டபம், தாரமங்கலம் |
| | மாலை 4.00 | எடப்பாடி நகரம் | நடராஜன் திருமண மஹால், நைனாம்பட்டி, எடப்பாடி. |

இக் கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள். நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் அந்தந்த ஒன்றிய, நகர மற்றும் பேரூராட்சிகளில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

# 31 ஆம் ஆண்டு நினைவு நாள்



காஞ்சிபுரம் **கே.டி.எஸ்.மணி**

மறைவு – 28.8.1993

★★★

இறுதி மூச்சு உள்ள வரை

**பெரியார், அண்ணா, கலைஞர்**

வழி நின்ற சுயமரியாதைச் சிங்கம்!

தம் உடலைத் தானம் செய்து

புகழுலகின் உச்சிக்கே சென்றுவிட்ட உத்தமர்!

**அ.இராமமூர்த்தி – இரா.அருளரசன்**

உறவினர்கள், நண்பர்கள். (விம்)